தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று, அத்தினத்துடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று என்பவற்றினை உள்ளடக்கிய 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் என்பன இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளன. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

மேற்படி அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களின் ஊடான பாதிப்பு தவிர்ந்த, 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களின் மூலம், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டு உள்ள நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அடிப்படைக்கு ஒத்தியங்கும் வகையில் சகல அளவு சார் தன்மைகள் தொடர்பிலும் நியாயமான நிலைமை ஒன்றினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்தின் மீதான அடிப்படை**

…………………………………………………………………

மேற்படி அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மதிப்பீடு செய்யப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.கொ.) ஒத்தியங்கும் வகையில் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டு உள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ள கணக்காய்வுச் சான்றுகள், போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கை ஆகும்.

**1.3 விடயம் ஒன்றினை வலியுருத்துதல் – நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை**

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அடிப்படையினை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்பு 1 தொடர்பில் கவனத்தினைக் கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரச நிதி ஒழுங்குவிதி 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் 16 ஆம் திகதிய மற்றும் 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் என்பவற்றிற்கு அமைய சட்ட ஆணைக்குழுத் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றம் என்பவற்றின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டு உள்ளது. ஆதலால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்காக பொருத்தமற்றதாக அமைய முடியும். எனது அறிக்கை சட்ட ஆணைக்குழுத் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றம் என்பவற்றின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்காகக் கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் மாற்றி அமைக்கப்படமாட்டாது.

**1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

………………………………………………………………………………………………………………………………………
…

அரச நிதி ஒழுங்குவிதி 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் 16 ஆம் திகதிய மற்றும் 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் என்பவற்றிற்கு ஒத்தியங்கும் வகையில் சகல அளவு சார் தன்மைகள் தொடர்பிலும் நியாயமான நிலைமை ஒன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய அளவுசார் பிறழ் கூற்றுக்கள் இன்றிய வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமாகும் வகையில் தேவைப்படும் உள்ளக நிருவாகத்தினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் சொந்த வருமானங்கள்,செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணி வருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 (1) (ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக விளைதிறன் மிகு உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்துப் பேணி வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை விளைதிறனுடைய வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

**1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

....................................................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகளினால் ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்றுக்கள் அற்றவை என நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் அளவு சார் ரீதியில் தவறான கூற்றுக்கள் அற்றவை என உறுதிப்படுத்தல் ஒன்றாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ பாதிப்புச் செலுத்துவதன் காரணமாக அளவு சார் ரீதியில் தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், மேற்படி நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிபாலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படும் பாதிப்பின் மீது தங்கியுள்ளது.

என்னால் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் ரீதியிலான தீர்ப்பு மற்றும் தொழில்சார் சிக்கனத்தன்மை என்பவற்றுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவு சார் பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தரப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்று ஒன்றினால் ஏற்படும் பாதிப்பினை விடவும் மோசடி ஒன்று காரணமாக ஏற்படும் பாதிப்பு வலிமை கூடியதாக அமைவது, கூட்டுச்சதி,போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல்,தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக நிருவாகங்களைத் தவிர்த்தல் போன்றவற்றின் காரணங்களினால் ஆகும்.

- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான வகையிலும் மற்றும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்புக்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் ஊடாக அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கெடுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தல்

..........................................................................................

### 1.6.1. வருமானம் அல்லாத வரவுகள்

..........................................

திறைசேரியின் அச்சிடப்பட்ட ளுயு 52 இற்கு அமைய முற்பண வரவுகள் ரூ. 807,918 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், மேற்படி பெறுமதி குறிப்பிடப்படாமையின் காரணமாக வருமானம் அல்லாத வரவுகளின் மொத்தப் பெறுமதி மேற்படி பெறுமதியினால் குறைவாக நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தது

### 1.6.2 கட்டுநிதிக் கணக்கு இணக்கக் கூற்றின் மீதி

....................................................................

திணைக்களத்தின் மீதிகள் தொடர்பான தேடலுக்கு அமைய ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பண "பீ" கணக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல்கள் எதுவும் காணப்படாத போதிலும், ரூ. 807,918 தொகை என்ற வகையில் கட்டுநிதிக் கணக்கு இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

### 1.6.3. நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய மற்றும் 04/2018 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் 04 ஆம் பிரிவிற்கு அமைய சகல அரச நிறுவனங்களும் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பில் அறிக்கையிடும் போது ரூ. 5,000 அல்லது அதிலும் கூடிய பெறுமதி ஒன்றுடனான நிதி அல்லாத சொத்துக்களை அடையாளம் கண்டு அறிக்கையிடுதல் வேண்டும் எனினும், ரூ. 5,000 இலும் குறைவான ரூ. 229,160 தொகை பெறுமதியான 501 வகையான நுகர்வுப் பொருட்கள் நிதி அல்லாத சொத்துக்களாக அடையாளம் காணப்பட்டு இருந்தன.

(ஆ) புதிய ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டம் திணைக்களத்தில் 2024 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படுவதன் காரணமாக 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

திணைக்களத்திற்கு உரித்தான நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தன. அதற்கு அமைய, கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மொத்தம் ரூ. 34,495,611 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், ரூ. 33,47,340 தொகை என்ற வகையில் ரூ. 548,271 தொகை குறைவாக திறைசேரி அச்சுப்பதிப்பு ளுயு 82 இல் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(இ) 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று திறைசேரி அச்சுப்பதிப்பு ளுயு 82 இற்கு அமைய புத்தகங்கள் வார சஞ்சிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் பெறுமதி ரூ. 27,388,342 ஆகக் காணப்பட்ட போதிலும், திணைக்களத்தின் நேற ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அட்டவணைக்கு அமைய அது ரூ. 27,377,550 தொகை ஆகக் காணப்பட்டமையினால் ரூ. 10,792 தொகை குறைவாக நேற ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

### 1.6.4 கட்டுநிதி மீதி

(அ) திறைசேரி அச்சுப்பதிப்பு ளுயு 71 இற்கு அமைய ஏனைய மூலங்களில் இருந்தான கட்டுநிதி வரவுகள் ரூ. 875,852 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், யுஊயு 3 மாதிரிப் படிவத்தில் இந்தப் பெறுமதி உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) திறைசேரி அச்சுப்பதிப்பு ளுயு 71 இற்கு அமைய செலவுகளின் மூலம் கட்டுநிதியினை ஈடுசெய்தல் ரூ. 17,737,902 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், ரூ. 16,862,050 தொகை என்ற வகையில் ரூ. 875,852 தொகை குறைவாக யுஊயு 3 மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

## 2. ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

...........................................................................................................

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ). நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்தியங்குகின்றன எனவும்,

(ஆ). கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்று தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டு இருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன.

## 3. நிதி மீளாய்வு

.......................

### 3.1 செலவின முகாமைத்துவம்

.........................................

(அ) மீண்டெழும் செலவின விடயங்கள் 16 இற்கும் மற்றும் மூலதனச் செலவின விடயங்கள் 02 இற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 24,360,000 தொகையில் ரூ.

5,424,385 தொகை எஞ்சி இருந்ததுடன், அது நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 99 வரையான வீச்சு ஒன்றிற்கு பரந்து காணப்பட்டது. அதற்கு அமைய தேவைப்பாட்டினை அடையாளம் கண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இருந்தன.

(ஆ) மீண்டெழும் செலவின விடயம் 02 இன் மொத்தம் ரூ. 100,000 தொகை ஆகிய ஒதுக்கீட்டுத் தொகை முழுமையாக எஞ்சிக் காணப்பட்டது.

(இ) 235-1-1-0-1403/0-11 செலவின விடயத்திற்காக நிதி ஒழுங்குவிதி 66 இனை மாற்றுவதன் கீழ் ரூ. 500,00 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்த போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது மேற்படி தொகை முழுமையாக எஞ்சிக் காணப்பட்டது. அதற்கு அமைய மேற்படி செலவின விடயத்தின் செலவிடப்படாமல் எஞ்சிக் காணப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூ. 570,190 தொகை ஆகக் காணப்பட்டதுடன் செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றுநிருபத்திற்கு ஒத்தியங்கும் வகையில் செலவுகளை வரையருத்தல் என்ற வகையில் காரணங்கள் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், நிதி ஒழுங்குவிதி 66 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றும் போது தேவைப்பாட்டினை சரியான முறையில் அடையாளம் காணாமல் ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டு இருந்தன.

(ஈ) செலவின விடயங்கள் 05 இன் மொத்தம் ரூ. 3,105,694 தொகை மீதிகளுக்காக 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையில் இருந்து எஞ்சிய தொகை என்ற வகையில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், இந்தச் செலவின விடயங்களின் மீதிகளுக்கு உரிய காரணங்களை நியாயப்படுத்துவதற்கான போதிய விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், தேவைப்பாட்டினை சரியான முறையில் அடையாளம் கண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.

(உ) 235-1-1-0-1203-002/11 செலவின விடயத்தின் ரூ. 30,000 தொகை அதாவது மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து நூற்றிற்கு 60 வீத அளவு எஞ்சியமைக்காக 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து செலவாகிய அளவு என்ற வகையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. உத்தியோகபூர்வ சீருடைக் கொடுப்பனவிற்காக உரித்தினைக் கொண்ட அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 07 ஆகக் காணப்பட்ட போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தாமல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இருந்தன.

(ஊ) 235-1-10-1506-0/11 செலவின விடயத்தின் மீதிகள் நூற்றிற்கு 99.25 வீதம் ஆகக் காணப்பட்டதுடன், மேற்படி மீதிகளுக்கு உரிய காரணங்கள் என்ற வகையில் தற்போதாகும் போது கோரப்பட்டு உள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டதன் பின்னர் மீதி என்ற வகையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அதற்கு அமைய, அரச ஊழியர்களுக்காக சொத்துக் கடன் வட்டியின் தேவைப்பாட்டினை சரியான முறையில் அடையாளம் கண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.

(எ) 03 செலவின விடயங்களில் ரூ. 447,381 தொகை மீதிக்காக டிசம்பர் மாதத்திற்கு உரிய செலவு என்ற வகையில் காரணங்கள் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், டிசம்பர் மாதத்திற்கு உரிய வகையில் மேற்படி 03 செலவின விடயங்களுக்கான மொத்தம் ரூ. 65,253 தொகை செலவினை ஏற்றதன் பின்னர் ரூ. 382,128 தொகை ஒதுக்கீடுகள் தொடர்ந்தும் எஞ்சிக் காணப்பட்டன.

**3.2 சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகாமை**

..............................................................................

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கான முன்னளிப்பு | | இணங்கி ஒழுகாமை |
|---|---|---|
| (அ) | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணங்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 (1) ஆம் பந்தி | அறவிட்டுக் கொள்ளப்பட்ட ரூ. 3,975 தொகை பெறுமதியான முத்திரைக் கட்டணங்களுக்காக உள்நாட்டு இறைவரிகள் திணைக்களத்தில் பதிவு செய்து ஒவ்வொரு காலாண்டும் பூர்த்தி அடைந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரிகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் எனினும் அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. |
| (ஆ) | 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 04/2024 இன் 3.1 ஆம் பிரிவு | ஊஐபுயுளு டெஸ்க்டொப் உள்ளீட்டின் மூலம் தோற்றுவிக்கப்படும் மீதிகளின் தேடலினை இணைப்பு ஒன்றாக நிதிக் கூற்றுக்களில் இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும் எனினும், அது இணைக்கப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே புதிய ஊஐபுயுளு வலையமைப்பு உள்ளீடுகள் முறைமையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இறுதியான திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களாகிய ளுயு 10இ12இ 59இ 51 மற்றும் 90 என்பன நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், புதிய ஊஐபுயுளு வலையமைப்பு உள்ளீடுகள் முறைமையின் ஊடாக உருவாக்கப்பட்ட திரண்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கை இணைப்பு (iii) இற்குப் பதிலாக உள்ளடக்கப்பட வேண்டும் எனினும், அவ்வாறு இணைக்கப்பட்டு இருக்கவில்லை. |
| (இ) | நிதி ஒழுங்குவிதி 238 (5) | மாதாந்தச் சம்பளம் பெறும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் சம்பளக் குறிப்புப் பத்திரத்தில் கையொப்பம் இட்டு உள்ளமை தொடர்பில் சம்பளம் செலுத்தும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் எனினும், 23 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூ. 1,744,263 தொகை சம்பளம் செலுத்துவதற்காக உத்தியோகத்தர்கள் சம்பளக் குறிப்புப் பத்திரங்களில் கையொப்பம் இட்டு இருக்கவில்லை. |
| (ஈ) | திறைசேரிச் செயலாளரின் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் நிதி ஒழுங்குவிதி | சில்லறைக் காசினை இடைக்காலக் கட்டுநிதியில் இருந்து ஒரு தடவையில் ஒரு தேவைப்பாட்டிற்காக செலுத்தக் கூடிய உச்ச எல்லை ரூ. 5,000 இனைத் தாண்டுதல் |

| | |
|---|---|
| 371 (2) (அ) இன் பிரகாரம் | கூடாது எனினும், 04 சந்தர்ப்பங்களில் ரூ. 5,000 தொகையினைத் தாண்டி ரூ. 25,810 தொகை செலவிடப்பட்டு இருந்தது. |

**4. செயல்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**4.1.1 திட்டமிடல்**

......................

(அ) 2024 ஆம் ஆண்டில் 04 சட்ட மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன், இது 2024 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. இதனுள் உள்ளடக்கப்பட்டுள்ள வங்குரோத்துத்தன்மை தொடர்பான சட்ட மறுசீரமைப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டு இருந்தது 2023 ஆம் ஆண்டின் யூன் 26 ஆம் திகதி ஆகும்.

(ஆ) திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட செயலாற்றுகைத் திட்டம் நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு மற்றும் நோக்கங்கள் என்பன உள்ளடக்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், செயலாற்றுகைச் சுட்டியினை நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு மற்றும் நோக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் அடையாளம் காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

**4.1.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை**

1969 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டக் கல்வி தொடர்பில் சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் கீழ்வரும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கவில்லை.

**4.2 அரசு உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக்கள்**

..............................................................

நிதி ஒழுங்குவிதி 880இன் பிரகாரம் அரச நிதி வருமான முத்திரைகள் அல்லது பொருட் பண்டங்களைப் பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல் ,அவ்வாறின்றேல் அரச நிதியினைப் பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரைகள் அன்றேல் பொருட் பண்டங்களை வழங்குதல் தொடர்பில் நிருவாக ரீதியாக பொறுப்புக் கூற வேண்டிய அல்லது பொறுப்பினை ஒப்படைத்தலின் கீழ் மேற்படி நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டு உள்ள உத்தியோகத்தர்களும் ,அரச கணக்கிற்கு உரிய வவுச்சர் பத்திரங்களை உறுதிப்படுத்தும் ,காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் சொந்தக் கடமை நடவடிக்கைகளை நேர்மையாக நிறைவேற்றுவதாக 612ஆம் அதிகாரம் ஆகிய அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கும் நீதி அமைச்சின் 2011 சனவரி மாதம் 18ஆம் திகதிய மற்றும் 2011/01ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய பிணை வைக்கப்பட வேண்டிய இரண்டு உத்தியோகத்தர்கள் பிணை வைத்து இருக்கவில்லை.

**4.3 முகாமைத்துவப் பலவீனங்கள்**

(அ) சர்வதேச சிறுவர் கடத்தல் தொடர்பான சிவில் துறைகளுக்கு உரிய சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்ளல் மற்றும் பங்குடைமை வியாபாரச் சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் ஆகிய சட்ட மறுசீரமைப்புப் பணிகள் இரண்டும் 2024 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருந்த போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போதும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) 2024 சனவரி 18 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆணைக்குழுக் கூட்டத்தின் போது 2024 ஆம் ஆண்டிற்காக 12 கூட்டத் தொடர்களை நடாத்துவதற்கு உறுப்பினர்கள் இணக்கம் தெரிவிக்கப்பட்டு இருந்த போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக 08 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டு இருந்ததுடன், அதற்காக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 14 பேர்களுள் 05 பேர் எந்தவொரு கூட்டத்திலும் பங்குபற்றி இருக்கவில்லை. இதற்கு அமைய, கூட்டங்களுக்காக உறுப்பினர்களின் பங்குபற்றல் குறைவடைந்தமையின் ஊடாக சட்ட ஆணைக்குழுவின் பணிகளைத் துரிதமாக மேற்கொண்டு செல்வதற்குத் தடையாக அமைந்து இருந்தது.

(இ) சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றுக் கொண்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து 1-3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட உள்ள இடர் கடன் மீதி ரூ. 162,500 தொகை ஆகக் காணப்பட்டது.

**5. மனித வள முகாமைத்துவம்**

..............................

**5.1 இணைக்கப்பட்டு உள்ள பதவியணி ,உண்மையான பதவியணி**

| மட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | வெற்றிடங்கள் / (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை மட்டம் | 06 | 03 | 03 |
| மூன்றாம் நிலை மட்டம் | 01 | 01 | 00 |
| இரண்டாம் நிலை மட்டம் | 15 | 06 | 09 |
| ஆரம்ப நிலை மட்டம் | 07 | 05 | 02 |
| | 29 | 15 | 14 |

(அ) சிரேஷ்ட நிலை மட்டத்தில் உள்ளடக்கப்படும் உதவிச் செயலாளர் பதவிக்குரிய அனுமதிக்கப்பட்ட ஆளணி 04 ஆகக் காணப்பட்ட போதிலும், உண்மையான ஆளணி 01 ஆகக் காணப்படுவதனால் 03 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், மேற்படி பதவிகளைப் பூர்த்தி செய்யத் தேவையில்லை என செயலாளரினால் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

(ஆ) இரண்டாம் நிலை மட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ஆளணி 15 ஆகக் காணப்பட்ட போதிலும், உண்மையான ஆளணி 06 ஆகக் காணப்படுவதனால் 09 வெற்றிடங்கள் காணப்பட்டன. இதில் கணக்கு உதவியாளர் பதவி ஒன்றும், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி 01 உம், முகாமைத்துவ உதவியாளர் பதவி 06 உம், தட்டச்சு எழுத்தாளர் பதவியும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. எனினும் தட்டச்சு எழுத்தாளர் பதவி மறைத்து வைக்க முடியுமான பதவி ஒன்று என செயலாளரினால் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

(இ) ஆரம்ப நிலை மட்டத்தில் உள்ளடக்கப்படும் சாரதிப் பதவியின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 04 ஆகக் காணப்பட்ட போதிலும், உண்மையான ஆளணி 02 ஆகக் காணப்படுவதனால் 02 வெற்றிடங்கள் காணப்பட்டன.

**யூ.என். அலுத்கே**
**சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்**
**கணக்காய்வாளர் நாயகம் சார்பில் (ப.க.)**

## அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| விசேட சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%)உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100%- 90% | 75%-89% | 50%- 74% |
| 1. இயந்திரம் மற்றும் இயந்திராதிகள் புணர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல் | 92% | | |
| 2. வாகனங்கள் | | | 67% |
| 3. தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரங்கள் கொள்வனவு | | 84% | |
| 4. அலுவலர்களின் பயிற்சி | 94% | | |

| தொடர். இல. | குறிகாட்டி | அலகு | | கா 1 | % | கா 2 | % | கா 3 | | கா 4 | % | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டு உள்ள சட்ட மறுசீரமைப்புக்களின் எண்ணிக்கை | இலக்கம் | T | 5 | 100% | - | - | - | | - | | 5 |
| | | | P | **5** | | **-** | | | | **-** | | **5** |
| 02 | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | இலக்கம் | T | 3 | 66% | 3 | 66% | 3 | 66% | 3 | 66% | 12 |
| | | | P | **2** | | **2** | | **2** | | **2** | | **8** |
| 03 | நடாத்தப்பட்ட தரப்பினர்களின் கூட்டங்களின் எண்ணிக்கை | இலக்கம் | T | 3 | 100% | 2 | 50% | 2 | 100% | - | 100% | 7 |
| | | | P | **12** | | **1** | | **2** | | **2** | | **17** |
| 04 | பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கைகள் மற்றும் கலந்துரையாடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகளின் எண்ணிக்கை | இலக்கம் | T | - | - | 1 | 100% | - | | 5 | 100% | 5 |
| | | | P | - | | 1 | | | | **4** | | **5** |
| **சராசரி பௌதீக முன்னேற்றம்** | | | | | **89%** | | **72%** | | **83%** | | **100%** | |

**பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கைகள் மற்றும் கலந்துரையாடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகள் –மொத்தம் 05**

கா 1 - வங்குரோத்துத்தன்மை தொடர்பான சட்டம் - பூர்த்தியாகி உள்ளது 01

கா 4 - கலந்துரையாடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகள்

- சிறுவர் கடத்தல் தொடர்பான சிவில் துறைகளுக்கு உரிய சமவாயச் சட்டம் 03
- குடியியல் நடவடிக்கைகள் சட்டக் கோவையின் 9(அ) பிரிவில் அணமைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பான பிரச்சினைகள் 01

} 04

**மொத்தம்** **05**

## அத்தியாயம் 05– நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றகை

## 5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக

| இலக்கு / குறிக்கோள் | அடைவுகள் | வெற்றி குறிகாட்டிகள் | இதுவரை அடையப்பெற்ற வெற்றியின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49 % | 50% - 74% | 75 %- 100 % |
| நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கு ஏற்ப பிரதான 3 குறிக்கோள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன:<br>**5ஆம் குறிக்கோள்:**<br>ஆண், பெண் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காக சகல பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் வலுவூட்டுதல்.<br>**10ஆம் குறிக்கோள்:**<br>நாடுகளுக்குள் மற்றும் நாடுகளுக்கிடையில் சமத்துவத்துவமின்மையைக் குறைத்தல்.<br>**16ஆம் குறிக்கோள்:**<br>நிலைபேறான அபிவிருத்திக்காக சமாதானம் உள்ளடங்கிய சமூக மேம்பாட்டை ஏற்படுத்தல், சகலருக்கும் நீதிக்காக அணுகுதலை வழங்குதல் மற்றும் சகல தரநியமங்களும் உள்ளடங்கிய செயற்றிறனான பொறுப்புக் கூறக் கூடிய நிறுவனத்தை தாபித்தல் | 1.அசாதாரண காரணிகள் மீது ஒதுக்கிக் கொள்ளக் கூடிய முறையிலான சகல முறைகளினதும் சட்டங்களை நீக்குதல் மற்றும் சமத்துவமான சட்டரீதியான பாதுகாப்பை உறுதிப்படுத்தல் அசாதாரண காரணிகளின் அடிப்படையில் ஒதுக்கப்படுகின்ற இடைவெளியைக் குறைத்தல்<br>2.புதிய சட்ட பரிகாரங்கள் மற்றும் தொலைநோக்குடன் முன்னேற்றம் மூலம் நிலவுகின்ற சட்டத்தை முன்னேற்ற முறையில் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைய இற்றைப்படுத்தல்.<br>3.நிலவுகின்ற நீதி முறைமையில் விருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்களை அடையாளம் காணுதல் மற்றும் மிகவும் பொருத்தமான சட்ட பரிகாரத்தை அடையாளம் காணுதல்.<br>4.சட்டத்தில் ஒழுங்குவிதிகளை விருத்தி செய்தல் மற்றும் சகலருக்கும் நீதிக்காக சமமான அணுகுதலை உறுதிப்படுத்தல்.<br>5.பொது மக்களுக்கு, மாணவர்களுக்கு மற்றும் கற்பவர்களுக்கு தர்க்கித்தல் மற்றும் திறனாய்வு என்பவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் சட்டம் தொடர்பாக கலந்துரையாடல் நடாத்துதலை ஏற்படுத்துவதற்கு புதிய சட்ட பரிந்துரையை அறிமுகப்படுத்தல் | 1. பொது மக்கள் மற்றும் அரச அலுவலகங்களால் முன் வைக்கப்படுகின்ற சட்ட முன்மொழிவு மற்றும் முன்வைப்புக்கள் என்பவற்றைக் கலந்துரையாடுதல்.<br>2. சர்வதேச சட்டவாக்கங்களுக்கு இணங்க ஆய்வுப் பத்திரங்களை தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்<br>3. நீதி ஆணைக்குழுவின் கருத்துக்கள் மற்றும் சமர்ப்பிப்பு என்பவற்றை உள்ளடக்கி சட்ட பரிந்துரைகளைத் தயாரித்தல்.<br>4. நீதி அமைச்சின் அல்லது உரிய அதிகாரிகளுக்கு தீர்மானிக்கப்பட்ட சட்ட பரிந்துரைகளை மேலதிக நடவடிக்கைகளுக்காக சமர்ப்பித்தல்.<br>5. நீதி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட சட்டத்தை சமர்ப்பித்தல் மற்றும் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், நீதி ஆணைக்குழுவின் இணையத்தளத்தை இற்றைப்படுத்துல் | | | ✓ |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக

இலங்கை முகங்கொடுத்துள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடியின் முன்னிலையில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல் தொடர்பான சவாலினை வெற்றி கொள்வதற்காக சட்ட ஆணைக்குழு உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் ஒருங்கிணைப்புடன் முன்வைக்கப்பட்ட வங்குரோத்துத்தன்மை தொடர்பான உத்தேச சட்ட மறுசீரமைப்பு முன்மொழிவுகள் கோவை மிகவும் முக்கியமானதாகும்இந்த சட்ட ரீதியான திருத்தத்தின் . ஊடாக நாட்டின் வங்குரோத்துத்தன்மை தொடர்பான சட்ட ரீதியான அமைப்பினை வலுப்படுத்தி சர்வதேச முதலீட்டாளர்களை இந்த நாட்டிற்கு கவர்ந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது .

# அத்தியாயம் 06 – மனித வள விபரம்

## 06.1 பதவியணி முகாமைத்துவம்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடம்/மேலதிக ஊழியர் |
|---|---|---|---|
| **சிரேஷ்ட மட்டம்** | | | |
| செயலாளர் | 1 | - | 1 |
| பிரதிச் செயலாளர் | 1 | - | 1 |
| உதவிச் செயலாளர் | 4 | 3 | 1 |
| **மூன்றாம் நிலை** | | | |
| மொழி பெயர்ப்பாளர் | 1 | 1 | - |
| **இரண்டாம் நிலை** | | | |
| கணக்கீட்டு உதவியாளர் | 1 | - | 1 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 4 | 3 | 1 |
| நூலகர் | 1 | 1 | - |
| முகாமை உதவியாளர்கள் | 8 | 2 | 6 |
| சுருக்கெழுத்தாளர் | 1 | - | 1 |
| **ஆரம்ப மட்டம்** | | | |
| சாரதிகள் | 4 | 2 | 2 |
| அலுவலக உதவி சேவை | 3 | 3 | - |
| மொத்தம் | 29 | 15 | 14 |

**06.2 <u>** பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக</u>**

நிறுவனத்தில் பதவி நிலைப் பதவிகளைப் போலவே ஏனைய பதவிகளில் வெற்றிடங்கள் இருந்த போதும் உண்மையான பதவியணியினரைப் பயன்படுத்தி மனித வளங்களை மிகவும் செயற்றிறனாக முகாமை செய்து திணைக்களத்தின் செயலாற்றுகையை சிறப்பான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு இயலுமாக இருந்தது.

## 06.3 <u>மனித வள அபிவிருத்தி</u>

*நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக விளக்குக.

| வேலை திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற பணியாளர் எண்ணிக்கை | வேலை திட்டத்தின் கால எல்லை | மொத்த முதலீடு (ரூ.) | வேலை திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/வெளிநாட்டு) | வெளியீடு/பெறப்பட்ட அறிவு* |
|---|---|---|---|---|---|
| அரசு கொள்முதல் செயல்முறை | 01 | 10 நாட்கள் | ரூ. 40,000 | உள்நாட்டு | அரசு கொள்முதல் செயல்முறையை சார்ந்த அறிவு |
| அறிவியல், முறையான மற்றும் பாதுகாப்பான வாகன ஓட்டம் | 02 | 01 நாள் | ரூ. 12,000 | உள்நாட்டு | பாதுகாப்பான வாகன ஓட்டம் தொடர்பான அறிவு |
| செலவுகள் மற்றும் கட்டண முறைகள் | 02 | 01 நாள் | ரூ. 27,000 | உள்நாட்டு | அரசு செலவுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான அறிவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு பொருள் சரிபார்ப்பு | 01 | 01 நாள் | ரூ. 13,500 | உள்நாட்டு | ஆண்டு பொருள் சரிபார்ப்பு தொடர்பான அறிவு |
| தமிழ்ப் பாடநெறி | 02 | 150 மணிநேரங்கள் | ரூ. 1,148 | உள்நாட்டு | தமிழ் மொழி தொடர்பான அறிவு |

# அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை | இல. | ஏற்புடைய தேவைப்பாடு |
|---|---|---|---|---|
| 1 | பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணங்கியது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு | இணங்கியது | | |
| 1.3 | வுணிக மற்றும ் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | இந்த திணைக்களத்துக்கு ஏற்புடையதல்ல | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | | | |
| 1.6 | ஏனையவை | | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணங்கியது. சிகாஸ் பயன்படுத்தப் படுவதில்லை என்பதோடு பெறுமதி பொழிப்பின் மூலம் கணக்கு பொழிப்பு மாதாந்தம் தயாரிக்கப்படு ம் | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.7 | பொருள் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணங்கியது | | |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணங்கியது | | |
| 3.2 | நிதி அதிகாரங்களைக் கையளித்தல் தொடர்பாக நிறுவனத்துக்குள் தெளிவுபடுத்தப்பட்டமை | இணங்கியது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணங்கியது | | |
| 3.4 | 2014.05.11திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணங்கியது | | |
| **4** | **வருடாந்த திட்டத்தைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணங்கியது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணங்கியது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இந்த திணைக்களம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை செயற்படுத்துவதில்லை என்பதோடு அத்தகைய நடவடிககைகளை நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது, | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | |
| **5** | **கணக்காய்வு வினவுகைகள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணங்கியது | | |
| 6 | உள்ளகக் கணக்காய்வு | | | |
| 6.1 | நி. பி.134 (2) DMA/1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இந்த திணைக்களம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை செயற்படுத்துவதில்லை என்பதோடு அத்தகைய நடவடிக்கைகளை நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது, | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணங்கியது | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | இணங்கியது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | இணங்கியது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | டிஎம்ஏ1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருத்தல் | கணக்காய்வு மற்றும் முகாமை குழு கூட்டங்கள் நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்து நடாத்தப்படுகின்றது | | |
| **8** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் தலைமை அதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கட்டுப்பாட்டாளர் தலைமை அதிபதி அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணங்கியது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கியது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணங்கவில்லை | அலுவளக பொருள் பரீட்சித்தலில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிக, பயன்படுத்த முடியாத ஏனைய பரிந்துரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் மேற்கொள்வதற்கு முடியாமை | எதிர் வரக்கூடிய வருடத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 8.5 | நி.பி 772 இன் படி தரம் குறைவாக மதிப்பிடப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணங்கியது | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணங்கியது | | |
| 9.2 | தரக்குறைவாக மதிப்பிடப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | தரக்குறைவாக மதிப்பிடப்பட்ட வாகனங்கள் இந்த திணைக்களத்தில் இல்லையென பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணங்கியது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணங்கியது | | |
| 9.5 | 2016.12.29ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | அத்தகைய வாகனங்கள் இந்த திணைக்களத்துக்கு இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | | |
| **10** | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணங்கியது | | |
| 10.2 | மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்படுத்தப்படாத வங்கிக் கணக்குளின் பிரச்சினை தீர்க்கப்பட்டிருத்தல் | செயற்படுத்தப்படாத வங்கிக் கணக்குகள் இந்த திணைக்களத்துக்கு இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல். | வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட சீர் செய்யப்பட வேண்டியிருந்த நிலுவைகள் இந்த திணைக்களத்துக்கு இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | | |
| **11** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணங்கியது | | |
| 11.2 | நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணங்கியது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணங்கியது | | |
| 12.2 | எஞ்சிய கடன் நிலுவைகள் தொடர்பாக காலப் பகுப்பாய்வொன்றை செய்திருத்தல் | இணங்கியது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை நிறைவேற்றியிருத்தல் | | இணங்கிய து | திடீர் விபத்தில் சிக்கிய காரணத்தால் அதிகாரி சிகிச்சை பெற்றுக்கொண்டு இருக்கிறார். |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | பொது வைப்பு கணக்கொன்று பராமரிக்கப்படுவதில்லை என்பதோடு இந்த திணைக்களத்துக்கு பொது வைப்புக் கணக்கொன்றைப் பராமரிப்பதற்கு தேவைப்பாடொன்று இல்லை | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 14 | **முன்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணங்கியது | | |
| 14.2 | நி.பி.371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல் | இணங்கியது | | |
| 14.3 | நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணங்கியது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணங்கியது | | |
| 15 | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இந்த திணைக்களம் வருமானம் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை என பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும | சேகரிக்கப்படுகின்ற வருமானம் நேரடியாக திறைசேரிக்கு அனுப்பப்படுகின்றது | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணங்கியது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் பட்டியல்களை வழங்குதல் | இணங்கியது | | |
| 16.3 | 2017.09.20ஆம் திகதியுடைய முகாமை சேவைத் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| **17** | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணங்கியது | | |
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணங்கியது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 ஆம் மற்றும் 10ஆம் பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணங்கியது | | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணங்கியது | | |
| 18.2 | அத்தகைய சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை தயாரித்திருத்தல் | இணங்கியது | | |
| 19 | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் ஒன்றை தயாரித்திருத்தல் | இணங்கியது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்திருத்தல் | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணங்கியது | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் தொடர்பில் பொறுப்புக்களைக் கையளித்து சிரேஷ்ட அலுவலர் ஒருவரை அதற்காக நியமித்திருத்தல். | இணங்கியது | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான மறுமொழி** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணங்கியது | | |

**முற்றும்**